12

# VELLORE DISTRICT
## இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2024
## பொருளியல்
## விடைக் குறிப்புகள்

*PREPARED BY*
**Dr. C. SUDHAKAR M.A., M.Phil., B.Ed.,Ph.D**
**GBHSS USSOOR**
**K. SUDHAKAR M.A., B.Ed.,**
**GHSS PANAMADANGI**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | ஈ) | எளிமை விதி | 6 | அ) | அ) காற்று மாசு |
| 2 | அ) | அ) விற்பனை வரி | 7 | ஈ) | ஈ) மேற்கூறிய அனைத்தும் |
| 3 | ஈ) | ஈ) இவை அனைத்தும் | 8 | இ) | இ) உற்பத்தி அதிகரிப்பு |
| 4 | ஆ) | K.C.பந்த் | 9 | ஆ) | ஆ) ஜெயப்பிரகாஷ் நாராயணன் |
| 5 | அ) | அ) உயிர் வாழ்வன | 10 | ஈ) | ஈ) National Institution for Transforming India |

**11.** 1. வரி என்பது எவ்வித பிரதிபலனையும் எதிர்பாராமல் அரசிற்கு கட்டாயமாக செலுத்தக் கூடியதாகும்
2. கட்டணம் என்பது கட்டாயமாக செலுத்தக் கூடியது அல்ல அரசனது சில சேவையை செய்வதற்காக வசூலிப்பதை கட்டணமாகும். **எ.கா.** ஓட்டுனர் உரிமம் வழங்குவதற்காக வசூலிப்பது கட்டணமாகும்.

**12.** CGST SGST IGST

**13.** சந்தையில்லாத, தனியார் சொத்துரிமை இல்லாத பொருட்கள் சுற்றுச்சூழல் பொருட்கள் எனப்படும். **எ.கா.**தூய்மையான காற்று, பசுமையான போக்குவரத்து உள்கட்டமைப்பு, பொதுப் பூங்காக்கள், ஆறுகள், மலைகள், கடற்கரை.

**14.** ஒரு விதை உரம் கலந்த களி மண்ணால் மூடி வைக்கப்பட்டு பிறகு உலர்த்தப்படுகிறது. இதை எங்கு வேண்டுமோ அங்கு விதைக்கலாம்.

**15.** **பொருளாதார வளர்ச்சி**
1. வளர்ந்த நாடுகளின் பொருளாதார பிரச்சினைகளை கையாளுகிறது.
2. எண்ணிக்கை அடிப்படையிலானது.

**பொருளாதார முன்னேற்றம்**
1. வளரும் நாடுகளின் பொருளாதார பிரச்சினைகளை கையாளுகிறது.
2. எண்ணிக்கை மட்டும் தர அடிப்படையிலானது.

**16.** 1. இது திட்டக் குழுவுக்கு மாற்றாக உருவாக்கப்பட்டது.
2. ஜனவரி 1, 2015 அன்று நடைமுறைப்படுத்தப்பட்டது.
3. இதன் தலைவர் இந்திய பிரதமர் ஆவார்.

**17.** 1. வேளாண்மை வருவாய் தவிர்த்த இதர வருமான வரி வருவாய்.
2. இந்திய அரசின் மத்தியப் பட்டியலில் உள்ள மத்திய கலால் வரி (மருத்துவ, கழிவறை மீதான வரி தவிர்த்த)

**18.** 1. பாதுகாப்பு பணி
2. நீதிப் பணி
3. சமூக நீதிப் பணி
4. கட்டமைப்பு பணி
5. சமூக நலப்பணி
6. பேரின பொருளாதாரக் கொள்கை பணி

**19.** **நேர்முக வரி**

1. வருமானம் மற்றும் செல்வத்தின் மீது விதிக்கப்படுவது.
2. வளர் வீதம்.
3. ஒரே நபர் மீது விழுகிறது.

**மறைமுக வரி**

1. பண்டங்கள் மற்றும் பணிகள் மீது விதிக்கப்படுவது.
2. தேய் வீதம்.
3. பல்வேறு நபர்கள் மீது விழுகிறது.

**20.** 1. E-கழிவுகள் என்பது மின்னணுக் கழிவுகள்.


2. மின்னணு சாதனப் பொருட்களை கழிக்கும் போதோ அல்லது மறுசுழற்சி செய்யும் போதோ E-கழிவுகள் தோன்றும்.

3. (உ.ம்) குளிர்சாதனப் பெட்டிகள், கைபேசிகள், கணினிகள்.

**21.** **அ) பருவநிலை மாற்றம் :** வெப்பநிலை, மழைப்பொழிவு, காற்று வீசுதல் ஆகியவற்றின் அளவுகளிலும் அவைகள் நிலவும் காலங்களில் ஏற்படும் குறிப்பிடத்தகுந்த மாற்றம் பருவநிலை மாற்றம் எனப்படுகிறது.

**ஆ) அமில மழை :**சல் பர் - டை - - ஆக்சைடு, நைட்ரஜன் ஆக்சைடு வளிமண்டலத்தில் நீருடன் வினைபுரிந்து மழை மற்றும் பனிப் பொழிவாக பூமிக்கு திரும்புவதை குறிப்பது அமிலமழை ஆகும்.

**22.**




**23.** 1.கூட்டுறவு மற்றும் போட்டி அடிப்படையிலான கூட்டாட்சி.

2. நாட்டின் நிகழ்வுகளில் மாநிலங்களை பங்கெடுக்க வைத்தல்
3. பரவலாக்கப்பட்ட திட்டமிடல்.
4. உகந்த தாக்குதல்.
5. சச்சரவு தீர்த்தல்
6. திறன் உருவாக்குதல்.
7. கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல்.

**24.** நான்கு வகையாகப் மாசுபடுதலை பிரிக்கலாம் அவையாவன:

1. காற்றுமாசுபடுதல் 2. நீர் மாசுபடுதல் 3. ஒலி மாசுபடுதல் 4.மண் மாசுபடுதல்

**25. அ)**

**1. வரி விதித்தல்:** வரிகள் மக்களிடமிருந்து வருமானத்தை அரசிற்கு மாற்றுகிறது. இது நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ இருக்கும்.

**2. பொதுச் செலவு:** பொதுச் செலவு பணியாளர்களின் கூலி மற்றும் சம்பளங்களை அதிகரிக்கும்போது பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான மொத்த தேவை உயருகிறது.

**3. பொதுக்கடன்:** அரசு, கடன் மூலமாக பொதுமக்களிடமிருந்து அரசிற்கு பணத்தை மாற்றம் செய்கிறது.

**25. ஆ)** **(ஏதேனும் 5 மட்டும்)**

**1. மக்கள் தொகை வளர்ச்சி:** மக்கள்தொகை வளர்ச்சியினால் உடல்நலம், கல்வி, சட்டம் ஒழுங்கு போன்றவற்றிற்காக பேரளவு முதலீடு செய்ய வேண்டியிருக்கிறது.

**2. பாதுகாப்பு செலவு:** இராணுவ தளவாடங்களை நவீனமயமாக்குவதால் இராணுவச் செலவு பல மடங்கு அதிகரித்துள்ளது.

**3. அரசு மானியங்கள்:** இந்திய அரசானது, உணவு, உரங்கள், முன்னுரிமை துறைக்கான கடன் வழங்கல், ஏற்றுமதி மற்றும் கல்வி போன்ற பல இடங்களுக்கு மானியங்களை வழங்குகிறது.

**4. கடன் சேவைகள்:** அரசானது அதிகமான அளவில் உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு ஆதாரங்கள் மூலம் கடன் பெற்றுள்ளன.

**5. வளர்ச்சித் திட்டங்கள்:** நீர்ப்பாசனம், இரும்பு மற்றும் எஃகு கனரக எந்திரங்கள், எரிசக்தி, தொலைதொடர்பு போன்ற வளர்ச்சி திட்டங்களுக்கு அதிக அளவு முதலீடு தேவைப்படுகிறது.

**6. நகரமயமாக்கல்:** நகரங்களில் மக்கள் தொகை விரைவாக அதிகர...

**26. அ)**

**நீடித்த வளர்ச்சியின் முக்கியத்துவம்.**

இப்போதுள்ள தலைமுறையினர் மட்டுமின்றி எதிர்காலத் தலைமுறையினரும் வாழ்வதற்குத் தேவையான வளத்தை வைத்துவிட்டு அடைகின்ற மேம்பாடு நீடித்த நிலையான மேம்பாடு. இது தலைமுறைகளுக்கு இடையேயான சமத்துவம்.

**நோக்கங்கள்:**

1. வறுமையை ஒழித்தல்.
2. பட்டினியை முடிவுக்கு கொண்டு வருதல்
3 நலமான வாழ்வை உறுதிப்படுத்துதல்.
4. தரமான கல்வியை வழங்குதல்.
5.பெண்களுக்கு அதிகாரம் வழங்குதல்.
6.குடிநீரும் சுகாதாரமும் அனைவருக்கும் உறுதிப்படுத்துதல்.
7.அனைவருக்கும் தரமான வேலை வாய்ப்பினை வழங்குதல்
8.நீடித்த நிலையான பொருளாதார வளர்ச்சியினை வழங்குதல்.
9.தேவையான கட்டமைப்புகளை வழங்குதல்.
10. தொழில்மயமாக்கல், புத்தகங்களை ஊ ஊக்குவித்தல்.

**26. ஆ)**

1. உலகின் சராசரி வெப்பநிலை அதிகரித்து வருவது உலக வெப்பமயமாதல் எனப்படுகிறது.

**2. நீர் மாசுக்கான காரணங்கள்**

1. கழிவுநீர் மற்றும் தேவையற்ற நீர் வெளியேற்றம்.
2. ஆலை கழிவுகளை கொட்டுதல்.
3. எண்ணெய் சிந்துதல்,
4. அமில மழை.
5.புவி வெப்பமடைதல்.

**27. அ)** **(ஏதேனும் 5 மட்டும்)**

**1. மக்களாட்சி திட்டமிடுதல் :** திட்டமிடுதலின் அனைத்து நிலைகளிலும் மக்கள் பங்கெடுத்துக் கொள்ளும் முறையே மக்களாட்சி திட்டமிடுதல் ஆகும்.

**2. சர்வாதிகார திட்டமிடுதல் :** பொருளாதாரத்தின் அனைத்து நடவடிக்கைகளும் அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் முறையே சர்வாதிகார திட்டமிடுதல் ஆகும்.

**3. மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதல் :** திட்டம் தொடர்புடைய நடவடிக்கைகள் மத்திய திட்டக்குழுவின் கட்டுப்பாட்டில் இருக்கும்.

**4. பரவலாக்கப்பட்ட திட்டமிடுதல் :** இது மத்திய திட்டக்குழுவின் கட்டுப்பாடின்றி செயல்படும் முறையாகும்.

**5. வழிகாட்டும் திட்டமிடுதல்:** இது திட்டக்குழுவின் வழிகாட்டுதலின்படி செயல்படுத்தப்படுதல் ஆகும்.

**6. தூண்டும் திட்டமிடுதல் :** இது திட்டக்குழு நிர்ணயம் செய்த இலக்குகளை மக்களைக் கொண்டே செயல்படுத்துவதாகும்.

**27. ஆ)**

**1. தன் விருப்பம்போல் செயல்பட இயலாமை :** திட்டமிட்ட பொருளாதாரத்தில் சிக்கலான முடிவுகளை மத்திய திட்டக்குழு எடுக்கிறது. இது நுகர்வோர், உற்பத்தியாளர் மற்றும் பணியாளர்களை கட்டுப்படுத்துகிறது.

**2. தன் முனைப்பை குறைத்தல் :** மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதலில் ஊக்கப்படுத்துதல் மற்றும் புதுமை புகுத்துதல் ஆகியவற்றுக்கு ஊக்கமிருக்காது.

**3. அதிகமான நிர்வாக செலவு :** திட்டமிடலின் நோக்கத்தை அடைய செலவிடும் தொகை, பலனை விட அதிகமாக இருக்கும்.

**4. முன் கணிப்பதில் உள்ள சிரமங்கள் :** திட்டமிடல் நாடுகளில் நுகர்வு மற்றும் உற்பத்தி அளவினை நிர்ணயிப்பது கடினம்.

www.Padasalai.Net